செ.வெ.எண்.61/நவம்பர் நாள் : 30.11.2019

## பத்திரிக்கை செய்தி
## அமைப்பாளர் காலிப்பணியிடத்திற்கு நேரடி நியமனம்

தருமபுரி மாவட்டம், தருமபுரி நகராட்சியில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின்கீழ் செயல்படும் கீழ்கண்ட பள்ளி சத்துணவு மையங்களில் காலியாக உள்ள அமைப்பாளர் பணியிடத்திற்கு ரூ.7700-24200/- என்ற ஊதிய விகிதத்தில், நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதிவாய்ந்த பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**காலிப்பணியிடங்கள்**

| வ.எண் | நகராட்சியின் பெயர் | பள்ளியின் பெயர் | இனசுழற்சி விவரம் | முன்னுரிமை விவரம் |
|---|---|---|---|---|
| 1. | தருமபுரி | டவுன் தொடக்கப்பள்ளி | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) | முன்னுரிமையற்றவர் |
| 2. | | அம்பலத்தவாடி தொடக்கப்பள்ளி | பொதுப்போட்டி | முன்னுரிமையற்றவர் |

விண்ணப்பங்களை தருமபுரி நகராட்சி ஆணையர் அலுவலகத்தில் 02.12.2019 முதல் 16.12.2019-க்குள் விண்ணப்பிக்கலாம். இப்பணிக்கு இன சுழற்சி முறை பின்பற்றப்படும். விண்ணப்பதாரர்கள் குடியிருக்கும் இடத்திற்கும் காலியாக உள்ள சத்துணவு மையத்திற்கும் இடையே உள்ள தூரம் 3 கி.மீ-க்குள் இருத்தல் வேண்டும். விண்ணப்பத்துடன் கல்வித்தகுதி, இருப்பிடம், இனம், விதவை/கணவரால் கைவிடப்பட்டவர் மற்றும் மாற்றுத்திறனாளி சான்றுகளின் நகல்கள் இணைக்கப்பட வேண்டும்.

**சத்துணவு அமைப்பாளர் பணியிடத்திற்கான தகுதிகள்**

| வ. எண் | விவரம் | பொது பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் | பழங்குடியினர் |
|---|---|---|---|
| 1 | கல்வி தகுதி | 10-ம் வகுப்பு தேர்ச்சி | எட்டாம் வகுப்பு தேர்ச்சி/ தோல்வி. |
| 2 | வயது | 21 வயது பூர்த்தி அடைந்து 40 வயது மிகாதவர்கள் | 18 வயது பூர்த்தி அடைந்து 40 வயது மிகாதவர்கள் |
| | | விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர்களுக்கு - 20 வயது பூர்த்தி அடைந்து 40 வயது மிகாதவர்கள் | |
| 3 | தூரசுற்றளவு | நியமன இடத்திற்கும் விண்ணப்பதாரர் குடியிருக்கும் இடத்திற்கும் இடையே உள்ள தூரம் 3 கி.மீட்டருக்குள் இருக்க வேண்டும் | |
| 4 | இனசுழற்சி | அரசாணை (நிலை) எண்.142 ப(ம)நி.சீ(கே)துறை நாள்: 14.10.2009-ன்படி இனசுழற்சி பின்பற்றப்படும். | |

16.12.2019 அன்று மாலை 5.00 மணி வரை பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின்னர் பெறப்படும் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தகுதி உள்ள நபர்களுக்கு மட்டுமே நேர்முக தேர்வில் கலந்துக்கொள்வதற்கான அழைப்பு கடிதம் அனுப்பப்படும். விண்ணப்பங்கள் தருமபுரி நகராட்சியில் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் தருமபுரி மாவட்ட இணையதள முகவரி dharmapuri.tn.nic.in என்ற முகவரியிலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பங்களை மாவட்ட ஆட்சியரகத்திற்கு அனுப்பக் கூடாது.

பூர்த்தி செய்த விண்ணப்பங்களை உரிய சான்றிதழ் நகல்களுடன் (Xerox) தருமபுரி நகராட்சி ஆணையர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**